DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No.19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சேகர் | Caste | : | |
| Father Name | : | தேவராஜ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **31.10.2025.**

**PW - 3**

**( 1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திருச்சி சஞ்சீவி நகரில் குடியிருக்கிறேன். எனது சொந்த ஊர் துறையூர் வட்டம், எரகுடி கிராமம் ஆகும். லாரி மெக்கானிக்காக வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கார்த்திக்கை தெரியும், அசா.1 பாலமுருகனை தெரியும். ஆஜர் 1 முதல் 6 எதிரிகளைத் தெரியும். புலியடி கருப்பு கோவில் கும்பாபிஷேகத்திற்காக 24.05.2019 அன்று எரகுடிக்கு திருவிழாவிற்காக சென்றேன். மறுநாள் சொந்த வேலையாக எரகுடி விஏஓ அலுவலகம் அருகே வந்தேன். அப்போது வழக்கில் இறந்துபோன கார்த்திக் ஓடிவந்தார். அவர் என்னிடம் தன்னை மருத்துவமனையில் இறக்கிவிட சொன்னார். அவரது உடலில் ஒரே காயமாக இருந்தது. அதனால் எரகுடி அரசு மருத்துவமனையில் இறக்கிவிட சொன்னார். கார்த்திக்கிற்கு எப்படி காயம்

ஏற்பட்டது என்று தெரியாது. நான் சம்பவம் எதையும் பார்க்கவில்லை. நான் கார்த்திக்கை எரகுடி அரசு மருத்துவமனையில் இறக்கிவிட்டு விட்டு அசா.1 பாலமுருகனுக்கு திரும்பி வரும் வழியில் தகவல் சொன்னேன். அடிபட்ட கார்த்திக் இறந்துவிட்டதாக மறுநாள் ஊரில் தகவல் சொன்னார்கள். என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. கார்த்திக்கை மருத்துவமனையில் விட்டுவிட்டு வந்து அவரது அண்ணனிடம் தகவல் சொன்னதுதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

*(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது)*

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிஸ் விசாரித்தபோது 25.05.2019 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் எரகுடி விஏஓ அலுவலகம் அருகே வந்தபோது கும்பலாக இருந்ததா என்றால் சுமார் 10 அல்லது 15 பேர் இருந்தார்கள். ஒரு விபத்து நடந்தது எதனால் நடந்தது என்று தெரியாது. எதிரிகள் 6 பேரும் கார்த்திக்கை கைகளாலும், கால்களாலும் அடித்தார்களா என்றால் தெரியாது. 1 ஆம் எதிரி சரவணன் ஓட்டலின் முன்புறமிருந்த கட்டையை எடுத்து கார்த்திக்கின் தலையில் மாறி மாறி அடித்தாரா என்றால் நான் பார்க்கவில்லை. அந்த கும்பலில் கார்த்திக் அம்மா, அப்பா வந்தார்களா என்று நான் பார்க்கவில்லை. கார்த்திக்கை மெய்யம்பட்டி செந்தில்குமாரும், அசா.1 பாலமுருகனும் என் வண்டியில் ஏற்றிவிட்டார்கள் என்றால் சரிதான். எரகுடி அரசு மருத்துவமனையில் கார்த்திக்கை இறக்கிவிடும்போது கார்த்திக் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுக்க பயந்து கொண்டு எதிரிகள் திரும்ப வந்து அடிப்பார்கள் என்று சொன்னார் என்றும், நான் அவரிடம் உள்ளே சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளும்படி சொன்னேன் என்றால் சரியல்ல. அன்று மதியம் 02.00 மணியளவில் வீரப்பன்

வாழைதோட்டத்தில் உள்ள சமாதியில் கார்த்திக் இறந்துகிடப்பதாக கேள்விபட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் 6 பேரும் என் ஊர்க்காரர்கள்தான். எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1, 3, 4, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 2019 காலகட்டத்திலும் திருச்சி சஞ்சீவி நகரில் குடியிருந்தேன் என்றால் சரிதான். நான் அந்த காலகட்டத்திலும் லாரி மெக்கானிக் தொழில்தான் செய்தேன். நான் ஊரில் விசேஷம் மற்றும் திருவிழாவின்போதுதான் ஊருக்கு செல்வேன் என்றால் சரிதான். எரகுடி விஏஓ அலுவலகம் அருகே கடைகள், அலுவலகங்கள், ஓட்டல் உள்ளதால் எப்போதும் ஆட்கள் நின்று கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் கார்த்திக்கிற்கு உடலிலேயே இரத்தமாக இருந்தது. கீழே போட்டு புரட்டியதுபோல் இருந்தது. என் வண்டியில் ஏறும்போதும் கார்த்திக் இரத்தக்கறையுடன்தான் ஏறினார். கார்த்திக் அணிந்திருந்த உடைகளிலும் இரத்தக்கறை இருந்தது. கார்த்திக் அன்றைய தினம் என்ன கலர் உடை அணிந்திருந்தார் என்று ஞாபகமில்லை. விஏஓ அலுவலகத்திலிருந்து எரகுடி அரசு மருத்துவமனை 500 முதல் 600 மீட்டர் தூரத்தில் உள்ளது. துறையூர்–எரகுடி மெயின்ரோட்டிலிருந்து 300 மீட்டர் உள்ளே தள்ளிதான் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் 150 மீட்டர் தள்ளிதான் உள்ளது. அன்றைய தினம் அசா.1 பாலமுருகனை நான் எங்கும் அழைத்து செல்லவில்லை. அவரிடம் சொல்லிவிட்டு போய்விட்டேன். அன்றைய தினமே நான் திருச்சி வந்துவிட்டேன் என்றால் சரிதான். அதன்பிறகு நான் ஊருக்கு போகவில்லை, காவல்நிலையத்திற்கு போனேன். போலிசார் அழைத்ததால் போனேன். போலிசார் 2 அல்லது 3 நாட்கள் கழித்து அழைத்தார்கள். சரியாக ஞாபகமில்லை. போலிஸ் விசாரித்தபோதும் முதல்விசாரணையில் சொன்ன விபரங்களைத் தான் சொன்னேன். வண்டியில்

ஏற்றிபோனேன், வேறு எதுவும் தெரியாது என்றுதான் சொன்னேன். அன்றைய தினம் கார்த்திக் காயங்களுடன் எனது வண்டியில் ஏறவில்லை என்றால் சரியல்ல. பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(2 ஆம் எதிரி தரப்பில் இதே குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது).**

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.